தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 162/ந/2022
நாள். 30.10.2022

திரு.ஹாஜா தவ்பிக்,
காயல்பட்டணம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண்.29A என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஹாஜா தவ்பிக் என்பவரின் 07.01.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2022 அன்று பெறப்பட்டு 162/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சின்ன நெசவு தெரு, கதவு எண்.29A என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஹாஜா தவ்பிக் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“காயல்பட்டணம் நகராட்சியின் உரிய அனுமதியின்றி கட்டப்பட்ட எண்.29, சின்ன நெசவுத் தெரு, காயல்பட்டணம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.A.H.ஆசியா பேகம் / திரு. A.H.அப்துல் ஹமீது ஆகியோரது வணிகக் கட்டடம் தொடர்பாக மேல்நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில் வழங்கப்பட்ட உயர்நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவினை சமர்ப்பிக்கிறேன்.

நகராட்சி ஆணையாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட கட்டடத்தை கடந்த செப்டம்பர் மாதம் 2020 அன்று நேரில் பார்வையிட்டு சென்றார். கட்டடத்தின் புகைப்படம் மற்றும் புகார் மனு நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 10.03.2021 அன்று பதிவுத் தபால் வழியாக அனுப்பப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்

அவர்களின் கடிதம் கிடைக்கப்பெற்றபோதிலும் இதுவரைக்கும் நகராட்சியால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இந்த புகார் மனுவின் மூலம்;

(i) அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட கட்டடத்திற்கு **TPA Act** 1971–ல் குறிப்பிட்டுள்ளவாறு நோட்டீஸ் அனுப்பி கட்டிட உரிமையாளர்களுக்கு விளக்கம் கேட்க நகராட்சி ஆணையாளர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படியும்;

(ii) குறிப்பிட்ட கால தவணைக்குள் நோட்டீஸின் மீது நடவடிக்கை எடுத்து – Unauthorised Construction என்பது உறுதி செய்யப்பட்டால் Immediate Lock and seal செய்ய உத்தரவிடும்படியும்.

(iii) மேலும், Unauthorised Construction ஐ முழுவதுமாக Demolition செய்து அப்புறப்படுத்துமாறும் காயல்பட்டணம் நகராட்சி துரிதமாக நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்குமாறு தங்களை பணிந்து வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் புளியங்குடி நகராட்சி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

புளியங்குடி நகராட்சி ஆணையாளர் தனது 11.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"காயல்பட்டணம் நகராட்சி பகுதி 29ஏ சின்ன நெசவு தெருவில் வசிக்கும் திரு.முஹைதீன் அப்துல் காதர் என்பவர், 29/3ஏல் வசிக்கும் திருமதி.ஆசியா பேகம் என்பவர் பொது பாதையினை ஆக்கிரமித்து குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடம் கட்டியுள்ளதாகவும், அதனை அகற்றிட கோரியும் 27.11.2020 அன்று மனு செய்திருந்தார். இதற்கிடையில் 29.07.2021 அன்று இதனை நகராட்சி ஆணையாளர் மற்றும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், தூத்துக்குடி அவர்களையும் எதிர்வாதியாக சேர்த்து, வழக்கு எண்.12989/2021ல் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கின் மீதான 29.07.2021 நாளிட்ட தீர்ப்பில் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், தூத்துக்குடி அவர்களை 8 வார காலத்திற்குள் ஒரு நியாயமான உத்தரவினை எடுத்திட அறிவுறுத்தப்பட்டது. இதன்பிறகு மேற்படி அலுவலகத்தில் இருந்து மேல்நடவடிக்கைக்காக காயல்பட்டணம் நகராட்சிக்கு 09.02.2022 அன்று கடிதம் வரப்பெற்றது. இதனை தொடர்ந்து சம்பந்தப்பட்ட இடமானது காயல்பட்டணம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இடையில் தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால், அது முடிந்த பின்னர் 01.03.2022 அன்று, முதல் அறிவிப்பு ஆக்கிரமிப்பாளருக்கு கொடுக்கப்பட்டது. 14.03.2022 அன்று, முதல் அறிவிப்பிற்கு ஆக்கிரமிப்பாளரிடமிருந்து பதில் பெறப்பட்டுள்ளது. 8 வார காலம் கடந்த நிலையில், மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.625/2022ல் தொடர்ந்ததை, நகராட்சி ஆணையாளர் மற்றும் உறுப்பினர் செயலர்,

உள்ளூர் திட்டக்குழுமம், தூத்துக்குடி ஆகியோர்கள் இவ்வழக்கில் அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுத்திருந்ததால், நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. தொடர்ந்து அக்டோபர் 07ம் நாள், மூடி முத்திரையிடப்பட அல்லது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என தெரிவித்து 2வது அறிவிப்பு வழங்கப்பட்டது. தற்போது கோப்பு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் புளியங்குடி நகராட்சி ஆணையரும் 11.10.2022 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.ஹாஜா தவ்பிக், 11.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''காயல்பட்டினம் நகராட்சி, சின்ன நெசவுத் தெரு, எண். 29ல் திருமதி. A.H.ஆசியா பேகம் மற்றும் திரு. A.H.அப்துல் ஹமீது ஆகியோர் உரிய அனுமதியின்றி வணிகக் கட்டடம் கட்டியுள்ளனர். இது தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் கிடைக்கப்பெற்ற போதிலும் இதுவரை காயல்பட்டினம் நகராட்சி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேற்கண்ட திருமதி. ஆசியா பேகம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து, மேற்கண்ட வீட்டை கட்டியபோது எங்களுக்கும் சொந்தமான பொதுப் பாதையை ஆக்கிரமித்து வீட்டை கட்டியுள்ளார். அதாவது எனது தாத்தா எங்களுக்கும், மேற்கண்ட திருமதி. ஆசியா பேகத்திற்கும் சுமார் ஐந்தரை சென்ட் நிலத்தை தானபத்திரம் மூலம் செட்டில் செய்யும்போது அங்குள்ள பொதுப்பாதையை அதாவது மூன்றரை அடி அகலம் கொண்ட பொதுப்பாதையை நாங்கள் இருவரும் பயன்படுத்திக்கொள்ளும்படி பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன்படி நாங்கள் இருவரும் அப்பாதையை பயன்படுத்தி வந்தோம். ஆனால், மேற்கண்ட திருமதி.ஆசியாபேகம் தனது இடத்தில் வீட்டை கட்டும்போது மேற்கண்ட மூன்றரை அடி அகலம் கொண்ட பாதையில், சுமார் ஒன்றரை அடி ஆக்கிரமிப்பு செய்து அதில் நகராட்சியின் கட்டட அனுமதியின்றி வீட்டை கட்டியுள்ளார். மேற்கண்ட திருமதி. ஆசியா பேகம் பொதுப்பாதையை ஆக்கிரமித்துள்ளதால், நாங்கள் அப்பாதையை பயன்படுத்த மிகவும் சிரமமாக உள்ளது. அதனை மேற்கண்ட திருமதி. ஆசியா பேகத்திடம் தெரிவித்தபோது மேற்கண்ட மூன்றரை அடி பாதை தங்களுக்குத்தான் சொந்தம் என தெரிவிக்கின்றனர். பாதிப்படைந்த நாங்கள் பலமுறை நகராட்சியில் புகார் அளித்தும் பயன் இல்லை. மேலும் அங்குள்ள ஜமாத்திலும் புகார் அளித்துள்ளோம். மேற்கண்ட பாதையில் எங்களுக்கும் பங்கு உண்டு என்பதை நிரூபிக்கும் வகையில், அதன் தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல்கள் மற்றும் இந்நேர்வு தொடர்பான நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனவே, அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பிடவும், Unauthorised Construction என உறுதி செய்யப்பட்டால் அக்கட்டடத்திற்கு Lock and seal செய்யவும், கட்டடத்தை இடித்திடவும் தேவையான

நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் பா. குமார் சிங் மற்றும் நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றும் சே. நிஜந்தன் ஆகிய இருவரும் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''காயல்பட்டணம் நகராட்சியில் ஆணையரான நானும், நகரமைப்பு ஆய்வாளரும் முறையே கடந்த 20 தினங்கள் மற்றும் 8 மாதங்களாக பணியாற்றி வருகிறோம். மனுதாரர் தெரிவித்துள்ள காயல்பட்டணம் நகராட்சி சின்ன நெசவு தெருவில் எண் 29ஏ என்கின்ற இடத்தை நகரமைப்பு ஆய்வரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டடம் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதால், அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பபட்டது. இதனைத் தொடர்ந்து Lock and Seal Notice சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு அனுப்பப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் ஆணையரான எனது 11.10.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், காயல்பட்டணம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.ஹாஜா தவ்பிக் என்பவர் தனது முறையீட்டு மனுவில், காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கதவு எண்.29/3A1 சின்ன நெசவு தெருவில் திருமதி. ஆயிஷாபேகம் என்பவரால் நகராட்சியின் அனுமதியின்றியும், பொதுப் பாதையினை ஆக்கிரமித்தும் கட்டிய வணிகக் கட்டடத்தை அகற்றக் கோரி வேண்டியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணத்தினை சார்ந்த திரு.K.M.முகைதீன் அப்துல்காதர் என்பவரால், காயல்பட்டணத்திலுள்ள நகர்புல எண்.468/1A, கதவு எண்.29/3A1, சின்ன நெசவு தெருவில், திருமதி.ஆயிஷாபேகம் என்பவரால் நகராட்சியின் அனுமதியின்றியும், பொதுப் பாதையினை ஆக்கிரமித்தும் கட்டிய கட்டடத்தை அகற்றக்கோரி, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.No.12989/2021–ல் உயர்நீதிமன்றமானது 29.07.2021 நாளிட்ட தீர்ப்பில், இவ்வழக்கின் மனுதாரான திரு.K.M.முகைதீன் அப்துல்காதர் என்பவர், ஒரு விரிவான மனுவினை தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு இரண்டு வாரக்காலத்திற்குள் அனுப்பிடவும் அதனை துணை இயக்குநரகம் எட்டு வாரக்காலத்திற்குள் பரிசீலித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்திடப்பட வேண்டும் என ஆணையிட்டுள்ளது. உயர்நீதிமன்ற ஆணைப்படி

திரு.K.M.முகைதீன் அப்துல்காதர் 08.10.2021 அன்று விரிவான மனுவினை சமர்ப்பித்துள்ளார். இப்பொருட்பாடானது காயல்பட்டணம் நகராட்சியை சார்ந்தது என்பதால் உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு காயல்பட்டணம் நகராட்சி ஆணையருக்கு 20.10.2021 நாளிட்ட கடிதம் மூலம் தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி, திரு.K.M.முகைதீன் அப்துல்காதர் என்பவரின் மனு காயல்பட்டணம் நகராட்சியால் பரிசீலிக்கப்படாமல் காலம் தாழ்த்தியதால் அவரது மகன் திரு.ஹாஜா தவ்பிக் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தில் (புல எண்.468/1A,29 சின்ன நெசவுத் தெரு) திருமதி.ஆயிஷா பேகம் என்பவரால் காயல்பட்டணம் நகராட்சியின் அனுமதியின்றியும், பொதுப் பாதையினை ஆக்கிரமிப்பு செய்தும் வணிகக் கட்டடத்தை முறைகேடாக கட்டியிருப்பதாக நகராட்சி ஆணையாளர் தனது விளக்க அறிக்கையிலும் மற்றும் வாக்குமூலத்திலும் தெரிவித்து இருப்பதன் மூலம் விதிமீறல் கட்டடம் கட்டப்பட்டது என்பது உறுதியாகிறது. மேலும் காயல்பட்டணம் நகராட்சியின் மேலாளர் மற்றும் பொது தகவல் அலுவலரும் மனுதாரர் புகார் தெரிவிக்கும் இடத்தில் நகராட்சியால் கட்டட அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் தகப்பனார் திரு.K.M.முகைதீன் அப்துல்காதர் என்பவர் விதிமீறல் கட்டடம் குறித்து 27.11.2020 அன்றே புகாராக நகராட்சிக்கு மனு அளித்தும், நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அவர் நீதிமன்றத்தை நாடியுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரரின் தந்தையார் 2020 ஆம் ஆண்டியிலேயே நகராட்சிக்கு புகாராக சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை நகராட்சி அலுவலர்களால் உடனடி நடவடிக்கை எடுக்காமல், அவர் நீதிமன்றத்தை நாடி, நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அவரது மகன் திரு.ஹாஜா தவ்பிக் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டபின், காலந்தாழ்த்தி அனுமதியின்றி முறைகேடாக கட்டிய கட்டடத்தை அகற்றுவது குறித்தான நடவடிக்கையை மேற்கொள்ளும் செயலானது நகராட்சி அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையும், மெத்தன செயலையும் காட்டுகிறது இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. இவ்வாறு தன்னிச்சையாக பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட சம்பந்தப்பட்ட காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது உரிய துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் ஆக்கிரமிப்பினை ஒரு மாத காலத்திற்குள் அகற்றி அறிக்கை சமர்ப்பிக்க காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிடப்படுகிறது.

வருங்காலங்களில் இதுபோன்ற பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து, நகராட்சிக்கு எவ்வித அவப் பெயர் ஏற்படா வண்ணம், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு.ஹாஜா தவ்பிக்,
29ய, சின்ன நெசவு தெரு,
காயல்பட்டணம் – **628 204.**
தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

31/10/
செயலாளர்
31/10/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032